بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلّي على رسوله الكريم　　وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர் காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 27

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

5 துல்ஹஜ் 1437 ஹிஜ்ரி கமரி　8 தபூக் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி　8 செப்டம்பர் 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**முழு உலகையும் சீர்திருத்துவதற்காக ஒரு தொண்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு காரணம் நமது எஜமானர் மற்றும் எவருக்காக நாம் தொண்டு புரிகின்றோமோ அவர் முழு உலகத்திற்காகவும் வந்துள்ளார். எனவே, இந்த மகத்தான தொண்டின் அடிப்படையில் இந்த சுமையை சுமக்கத் தேவைப்படும் அந்த ஆற்றல்களும் சக்திகளும் கூட எனக்கு தரப்பட்டிருக்கின்றன. மேலும், அத்தாட்சியை நிறைவடையச் செய்வதற்காக பொருத்தமான நேரத்தில் தரப்பட வேண்டிய அந்த இறை ஞானங்களும் அடையாளங்களும் கூட எனக்கு தரப்பட்டிருக்கின்றன.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

முழு உலகையும் சீர்திருத்துவதற்காக ஒரு தொண்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு காரணம் நமது எஜமானர் மற்றும் எவருக்காக நாம் தொண்டு புரிகின்றோமோ அவர் முழு உலகத்திற்காகவும் வந்துள்ளார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே, இந்த மகத்தான தொண்டின் அடிப்படையில் இந்த சுமையை சுமக்கத் தேவைப்படும் அந்த ஆற்றல்களும் சக்திகளும் கூட எனக்கு தரப்பட்டிருக்கின்றன. மேலும், அத்தாட்சியை நிறைவடையச் செய்வதற்காக பொருத்தமான நேரத்தில் தரப்பட வேண்டிய அந்த இறை ஞானங்களும் அடையாளங்களும் கூட எனக்கு தரப்பட்டிருக்கின்றன. ஆனால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு அந்த இறை ஞானங்களும் அடையாளங்களும் தரப்பட வேண்டியது அவசியமானதல்ல.☆ ஏனென்றால், அந்த நேரத்தில் அதற்கான தேவை இருக்கவில்லை. ஏனெனில், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களது இயல்பிற்கு யூதர்களின் ஒரு சிறு பிரிவின் சீர்திருத்தத்திற்காக தேவைப்படுகின்ற அந்த ஆற்றல்களும் சக்திகளும் தரப்பட்டிருக்கின்றன. நாம் திருக்குர்ஆனின் வாரிசுகளாக இருக்கின்றோம். அதன் போதனை அனைத்து முழுமைத் தன்மைகளின் தொகுப்பாக இருக்ககின்றது. அது முழு உலகத்திற்கும் உரியதாகும். ஆனால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தவ்ராத்திற்கு மட்டுமே வாரிசாக இருந்தார். அவரது போதனை குறையுள்ளதாகவும் குறிப்பிட்ட ஒரு சமுதாயத்திற்கான போதனையாகவும் இருந்தது. இதன் காரணமாகவே தவ்ராத்தில் மறைவாக இருந்த அந்த விஷயங்களை அவர் சுவிசேஷங்களிலும் வலியுறுத்திக் கூற வேண்டியது வந்தது. ஆனால், திருக்குர்ஆன் கூறியிருப்பதை தவிர்த்து நாங்கள் எந்த விஷயத்தையும் அதிகப்படியாகக் கூற முடியாது. ஏனென்றால், அதன் போதனை நிறைவானதும் முழுமையானதுமாகும். அதற்கு தவ்ராத்தைப் போன்ற எந்தவொரு சுவிசேஷயத்திற்கான தேவையும் இல்லை. யூதர்களின் பிரிவின் சீர்திருத்தத்திற்காக போதுமானதாக இருந்த அதற்கு தேவையான அளவிலுள்ள ஆன்மீக ஆற்றல்களும் சக்திகளும் தான் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு தரப்பட்டிருக்கின்றது என்பது தெளிவான வெளிப்படையான விஷயமாகும். பிறகு அவ்வாறான நிலைமையில் அவர்களது முழுமைத் தன்மைகளும் கூட அதே அளவுகோலின் அடிப்படையில்தான் இருக்கும்.

இதைப் பற்றியே அல்லாஹ் وَاِنْ مِّنْ شَیْءٍ اِلَّا عِنْدَنَا خَزَآئِنُهٗ وَمَا نُنَزِّلُهٗۤ اِلَّا بِقَدَرٍ مَّعْلُوْمٍ "ஒவ்வொரு பொருளின் கருவூலமும் நம்மிடம் இருக்கின்றது. ஆனால், தேவைக்கு அதிகமாக அவற்றை நாம் இறக்குவதில்லை" என்று கூறுகின்றான். ஒரு நபியின் சமுதாயத்தின் சீர்திருத்தத்திற்காக அந்த சமுதாயத்துடன் அறவே தொடர்பில்லாத அறிவுகள் தரப்படுவது என்பது இறைவனின் நுட்பமான ஞானத்திற்கு எதிரானதாகும். இன்னும் சொல்வதென்றால், விலங்குகளிலும் கூட இறைவனின் இதே இயற்கைச் சட்டம்தான் காணப்படுகின்றது. உதாரணமாக, குதிரையை இந்த நோக்கத்திற்காகத்தான் இறைவன் படைத்துள்ளான். அதாவது தொலைதூரத்தைக் கடந்து செல்வதற்கு அது சிறந்த முறையில் பயன்படுகின்றது. ஒவ்வொரு மைதானத்திலும் ஓடுவதன் மூலமாக தன் மீது சவாரி செய்பவருக்கு உதவி செய்யக்கூடியதாக அது இருக்கின்றது. ஓர் ஆடு இந்தப் பண்புகளில் அக்குதிரையுடன் போட்டி போட முடியாது. ஏனென்றால், அது இந்த நோக்கத்திற்காகப் படைக்கப்படவேயில்லை. அவ்வாறே இறைவன் தண்ணீரை தாகத்தைத் தணித்துக் கொள்வதற்காகப் படைத்துள்ளான். எனவே, நெருப்பு அதற்குப் பகரமாக அது இருக்கும் இடத்தில் இருக்க முடியாது. மனிதனின் இயல்பு பல கிளைகளைக் கொண்டதாக இருக்கின்றது. பல்வேறு ஆற்றல்களை இறைவன் அதற்குள் வைத்துள்ளான். ஆனால், பைபிள் ஒரே ஆற்றலான மன்னிப்பது மற்றும் கண்டும் காணாமல் விட்டு விடுவதன் பக்கம் மட்டுமே வலியுறுத்திக் கூறுகின்றது. அதாவது, மனித மரத்தின் நூற்றுக்கணக்கான கிளைகளில் ஒரேயொரு கிளை மட்டும் பைபிளின் கையில் இருக்கின்றது. எனவே, இதன் மூலமாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களது இறை ஞானத்தின் உண்மை நிலை எதுவரை இருக்கின்றது என்பது தெரிய வருகின்றது. ஆனால், நமது நபி (ஸல்) அவர்களின் இறை ஞானம் மனித இயல்பின் உச்சம் வரை எட்டியிருக்கின்றது. இதனால்தான் முழுமை

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

## 122 -வது காதியான் ஆண்டு மாநாடு (ஆண்டு மாநாடு தொடங்கப்பட்டதிலிருந்து 125 -வது வருடம்)

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் காதியான் ஆண்டு மாநாட்டை 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 26, 27, 28 (திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில்) தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் எண்ணத்துடன் அதற்காக தயாராகத் தொடங்கி விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இறைவனுக்காக நடத்தப்படும் இம்மாநாட்டிலிருந்து அருள்களைப் பெறுவதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக! ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாக நடப்பதற்கும் நல்ல ஆன்மாக்கள் நேர்வழியைப் பெறுவதற்கும் அது காரணமாக இருப்பதற்கும் நீங்கள் தொடர்ந்து துஆ செய்யுங்கள். (தலைமையக நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாத்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இது அல்லாஹ்வின் அருளும் பேருபகாரமுமாகும். அவன் நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். அல்லாஹ்வின் அருளால் உலகில் ஒவ்வொரு நாட்டிலும் இது ஜமாஅத் சகோதரர்களின் இயல்பாக ஆகி விட்டது. அதாவது ஜமாஅத்தின் ஒவ்வொரு மட்டத்திலுள்ளவர்களும் ஒவ்வொரு வயதிலுள்ள சகோதரர்களும் ஆண்டு மாநாட்டிற்கு வருகின்ற விருந்தினர்களுக்கு தொண்டு செய்ய வேண்டியதுள்ளது.

இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த அடிமைகள் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப தன்னலம் பார்க்காமலும் எதையும் எதிர்பார்க்காமலும் சோர்வடையாமலும் முகம் சுளிக்காமலும் இந்த விருந்தினர்களுக்குத் தொண்டு செய்கின்றனர். இந்த விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதும் மாநாட்டிற்கான ஏற்பாடுகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்வதும் நமது கடமையாகும்.

நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்வது விருந்தினர்களுக்குரிய உரிமையாகும். மேலும் அது விருந்தோம்பல் செய்பவரின் கடமையாகும்.

அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள வாக்குறுதிக்கு ஏற்ப உலகில் ஒவ்வோரிடத்திலும் ஜமாஅத்துகள் வலுவான அடித்தளங்களில் நிலைத்து நிற்கின்றன. லங்கர் (விருந்தகம்) செயல்பட்டு வருகின்றது. குறிப்பாக மாநாட்டின் நாட்களில் இதற்கான சிறப்பான ஏற்பாடு இருக்கின்றது.

தொண்டு செய்வதற்காக நம்மை நாமே அர்ப்பணிக்கின்ற போது பிறகு எவ்வித பாகுபாடுமின்றி ஒவ்வொருவருக்கும் தொண்டு செய்ய வேண்டும். மாநாட்டிற்கு வருகின்ற ஒவ்வொரு விருந்தாளியும் ஆண்டு மாநாட்டின் விருந்தாளியாக இருக்கின்றார். ஒவ்வொருவரிடமும் நல்ல முறையில் நடந்து கொள்வதும் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதும் அவசியமானதாகும்.

பிறகு இதற்காக துஆவும் செய்ய வேண்டும். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினருக்கு செய்கின்ற இந்த சிறிய தொண்டை ஏற்றுக் கொள்வானாக! நமது பணிகள் எல்லா விதமான வெளி வேஷங்களிலிருந்தும் வெற்றிடமாக இருக்க வேண்டும். முழுக்க முழுக்க கலப்பற்ற முறையில் அது அல்லாஹ்வுக்காக செய்யப்பட வேண்டும்.

ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் விருந்தினர்களின் விருந்தோம்பலின் தரத்தை மிகவும் சிறப்பானதாக ஆக்குவதற்கு விருந்தோம்பல் செய்பவர்களுக்கும் ஆண்டு மாநாட்டின் அமைப்பாளர்களுக்கும் தன்னார்வத் தொண்டர்களுக்கும் ஹுஸூர் அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ள மிகவும் முக்கியமான போதனைகள்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில் 5 ஆகஸ்டு 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **5 ஸஹூர்** மாதம் ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

அடுத்த வெள்ளிக்கிழமையிலிருந்து இங்கிலாந்தின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகின்றது – இன்ஷா அல்லாஹ். அல்லாஹ்வின் அருளால் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பல்வேறு நாடுகளிலிருந்தும் விருந்தினர்களின் வருகை ஆரம்பமாகி விட்டது. அல்லாஹ் ஆண்டு மாநாட்டின் அமைப்பாளர்களுக்கு மாநாட்டில் வருகை தருகின்ற விருந்தினர்களுக்கு அவர்கள் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வருபவர்களானாலும் சரி அல்லது இங்கிலாந்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருபவர்களானாலும் சரி அவர்கள் அனைவருக்கும் சிறந்த முறையில் தொண்டாற்றுவதற்கான நற்பாக்கியத்தை அவர்களுக்கு வழங்குவானாக! அல்லாஹ்வின் அருளால் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகும் போது, மாநாட்டின் ஏற்பாடுகளும் அதிகமாகின்றன. இதனால் தொண்டு செய்பவர்களும் அதிகமாக தேவைபடுகின்றனர். அல்லாஹ்வின் அருளால் எவ்வித சிரமமுமின்றி சிறுவர்களும், இளைஞர்களும், ஆண்களும், பெண்களும் தங்களை தொண்டு செய்வதற்காக அர்ப்பணிக்கின்றனர். பெரும்பாலான இளைஞர்களும் சிறுவர்களும் இந்த தொண்டுகளை நிறைவேற்றி இது அல்லாஹ்வின் அருளும் பேருபகாரமுமாகும். அவன் நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்கியுள்ளான் என்று கருதுகின்றனர். அல்லாஹ்வின் அருளால் உலகில் ஒவ்வொரு நாட்டிலும் இது ஜமாஅத் சகோதரர்களின் இயல்பாக ஆகி விட்டது. அதாவது ஜமாஅத்தின் ஒவ்வொரு மட்டத்திலுள்ளவர்களும் ஒவ்வொரு வயதிலுள்ள சகோதரர்களும் ஆண்டு மாநாட்டிற்கு வருகின்ற விருந்தினர்களுக்கு தொண்டு செய்ய வேண்டியதுள்ளது.

கடந்த வாரம் வெள்ளிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுகிழமை வரை அமெரிக்கா அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு நடைபெற்றது. அங்கும் கூட அவர்களின் நிகழ்ச்சி இணையதளத்திலும் youtube –லும் வந்தன. அதில் நான் ஒரு நேர்காணலைப் பார்த்தேன். நேர்காணலை நடத்தியவர், குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஒரு பொறுப்பாளருடன் நேர்காணல் நடத்திக் கொண்டிருந்தார். அவர் ஆண்டு மாநாட்டின் தயாரிப்பிற்காக காதிம்களும் தன்னார்வத் தொண்டர்களும் எவ்வாறு பணியாற்றினர் என்று கூறிக் கொண்டிருந்தார். இவ்வாறு அந்த நிகழ்ச்சியில் 19 அல்லது 20 வயதுடைய ஓர் இளைஞரின் நேர்காணலும் இருந்தது. அவரிடம், அமெரிக்காவிலேயே பிறந்து அங்கேயே வளர்ந்த நீங்கள் இந்த எல்லா பணிகளையும் எவ்வாறு செய்கின்றீர்கள்? இதற்காக உங்களுக்கு எவ்வளவு தொகை கிடைக்கும்? எத்தனை டாலர்கள் கிடைக்கும்? என்று கேட்கப்பட்டது. அந்த நாட்டில் உலகவாதிகளின் சிந்தனை பொதுவாக அப்படிப்பட்டவர்களிடம் இருக்கும். ஆனால், அந்த இளைஞரின் பதில் இதுவாக இருந்தது. நாங்கள் தன்னார்வத்துடன் தொண்டாற்றுகின்றோம். இதற்காக எங்களுக்கு கிடைக்கும் கூலி உலகவாதிகளின் சிந்தனையை விட உயர்வானதாகும். நாங்கள் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக பணியாற்றுகின்றோம். இந்த இயல்புதான் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் வாழ்கின்ற அஹ்மதிகளின் இயல்பாக இருக்கின்றது. அவர் ஆப்பிரிக்கராக இருந்தாலும் சரி, இந்தோனோஷியாவில் உள்ளவராக இருந்தாலும் சரி, தீவுகளில் வாழ்பவராக இருந்தாலும் சரி அல்லது உலகில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் வாழ்பவராக இருந்தாலும் சரி, விடுமுறை நாட்களின் போது கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் விளையாட்டிற்கும் கேலிக்கைகளுக்கும், உல்லாசப் பயணங்களுக்கும் உலகிலுள்ளவர்கள் முன்னுரிமை வழங்கும் போது, உலக வேலைகளில் இருப்பவர்கள் அவர்களுக்கு விடுமுறை கிடைக்கும்போது அவர்கள் ஓய்வெடுப்பதற்கும் குடும்பத்தினருடன் தமது விடுமுறை நாட்களைக் கழிப்பதற்குமே முன்னுரிமை வழங்கும்போது அந்த சமயத்தில் ஓர் அஹ்மதி முன்னுரிமை வழங்குவது அதிலிருந்து மாறுபட்டதாக இருக்கின்றது. இந்த விடுமுறை நாட்களில் ஆண்டு மாநாடு வருகின்றது. இந்த நாட்களில் படித்தவர்களும் படிக்காதவர்களும் அதிகாரிகளும் அவர்களின் கீழ் இருப்பவர்களும் தொழிலில் திறமை பெற்றவர்களும், சாதாரண தொழிலாளிகளும் மாணவர்களும் தம்மைத் தாமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்ருக்கு தொண்டு செய்ய தம்மை அர்ப்பணிக்கின்றனர்.

உலகிலுள்ள ஏனைய நாடுகளின் ஆண்டு மாநாடு பெரிய பெரிய ஹால்களில் நடக்கின்றது. அங்கு பல வசதிகளும் அவர்களுக்கு கிடைக்கின்றது. ஆனால், இங்கிலாந்தின் ஆண்டு மாநாடு எத்தகைய இடத்தில் நடக்கின்றது என்றால் அங்கு எல்லா ஏற்பாடுகளும் தற்காலிகமாகவே செய்யப்படுகின்றது. செய்ய முடிகின்ற மற்றும் சாத்தியமுள்ள எல்லா வசதிகளையும் நாம் இந்த இடத்தில் செய்ய வேண்டியுள்ளது. பிறகு கவுன்ஸில் தரப்பிலிருந்தும் இந்த நிபந்தனை வைக்கப்பட்டுள்ளது. அதாவது, மாநாட்டிற்கான வேலைகளை ஆரம்பிக்கின்ற நாளிலிருந்து ஆண்டு மாநாடு முடிந்த பிறகு எல்லாப் பொருள்களையும் அங்கிருந்து அகற்றிய பிறகு முதலில் இருந்தது போன்றே அந்த நிலத்தை பசுமையாக வைத்திருப்பது ஆகிய இந்த எல்லாப் பணிகளையும் 28 நாட்களுக்குள்

செய்து முடிக்க வேண்டும். இந்த வகையில் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் மிகவும் விரிவான ஒரு பணியை செய்து முடிப்பதற்கு அதிகமான தன்னார்வத் தொண்டர்கள் தேவைப்படுகின்றனர். பணியை ஆரம்பித்து அதை முடிப்பது வரையுள்ள கால அளவு ஒருபுறம் அந்தப் பணியின் தன்மையை பொருத்து மிகவும் குறைவான நேரமாக இருக்கின்றது. ஆனால், தன்னார்வத் தொண்டர்கள் 28 நாட்களுக்குள் பணியைச் செய்து முடிப்பது என்பது, இன்னும் சொல்வதென்றால் இதற்கும் முன்னதாகவே பணிகள் ஆரம்பமாகி விடுகின்றது. அந்தப் பணிகள் நேரடியாக மாநாட்டுத் திடலில் செய்யப்படும் பணிகளாக இல்லாமல் இருந்தாலும் மாநாட்டின் தயாரிப்பிற்காக ஒன்றிரண்டு வாரங்களுக்கு முன்னதாகவே தன்னார்வத் தொண்டர்கள் தமது பணியை செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். இன்னும் சொல்வதென்றால், இங்குள்ள சில பணியாளர்களில் சிலர் இவ்வாறு இருக்கின்றனர் அவர்கள் தமது பொருளையும் நேரத்தையும் ஏறக்குறைய ஒன்றரை அல்லது இரண்டு மாதங்களுக்காக தியாகம் செய்தவாறு தமது பணிகளை செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். ஒரு மனிதன் இவ்வளவு காலம் தன்னார்வத்துடன் பணி செய்வதற்கு இது மிக நீண்ட காலமாக இருக்கின்றது. இந்த வகையில் இங்கிலாந்திலுள்ள தன்னார்வத் தொண்டர்களுக்கு ஆண்டு மாநாட்டிற்காக தியாகம் செய்வது மற்றும் ஆண்டு மாநாட்டிற்காக டியூட்டி கொடுப்பது பற்றிய முக்கியத்துவம் தெரிந்திருக்கின்றது. ஆனால், பிறகும் கூட பல பணியாளர்கள் புதிதாக இப்பணியில் கலந்து கொள்கின்றனர். சிலருக்கு விருந்தினர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டியது இருக்கின்றது. அவர்களது டியூட்டி இருக்கின்றது. சிலருக்கு நான் ஏற்கனவே கூறியது போன்றே இன்றிலிருந்தே அந்தப் பணிகள் ஆரம்பமாகி விடுகின்றன. இவர்கள் எல்லாருக்கும் நினைவூட்டும் வகையில் பொதுவாக இருந்து வருகின்ற வழக்கத்திற்கேற்ப நான் சில விஷயங்களை கூறுவேன். சில நேரங்களில் சில தொண்டு செய்கின்ற உணர்வு மிகவும் அதிகமாக இருக்கின்றது. எல்லாரது இயல்பும் ஒன்றுபோல் இருப்பதில்லை. சிலருக்கு சில பணிகளைச் செய்வதற்கு தைரியம் இருப்பதில்லை. சிலர் அறிவு இல்லாததன் காரணமாக எப்படிப்பட்ட விஷயங்களைப் பேசி விடுகின்றனர் என்றால் அல்லது அவர்களிடமிருந்து சில செயல்கள் எவ்வாறு நடந்து விடுகின்றன என்றால் அது விருந்தினர்களின் துன்பத்திற்குக் காரணமாக ஆகி விடலாம். நினைவூட்டுகின்றபோது தன்னார்வத் தொண்டர்களாக இருக்கும் பணியாளர்கள் மிகவும் கவனத்துடன் தங்களது கடமையை நிறைவேற்ற முயற்சி செய்கின்றனர். அது அல்லாமல் பணியாளர்களும் தொண்டு செய்யும் உணர்வோடு பணியாற்றவில்லை என்ற எந்த குறையும் எனக்கில்லை. நிச்சயமாக எல்லாப் பணியாளர்களும் தொண்டு செய்யும் உணர்வுடன் தான் பணியாற்றுகின்றனர். நினைவூட்ட வேண்டும் என்பதும் அவர்களை விழிப்பூட்ட வேண்டும் என்பதும் இறைவனின் கட்டளையாகும். எனவேதான், நான் ஒவ்வொரு வருடமும் ஆண்டு மாநாட்டின்போது மாநாடு நடப்பதற்கு ஒரு நாளுக்கு முன்னதாக இதன் பக்கம் கவனமூட்டி வருகிறேன்.

அல்லாஹ் விருந்தோம்பல் பற்றி குறிப்பிடும் போது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் விருந்தோம்பலைப் பற்றி குறிப்பிட்டு விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் விருந்தோம்பலின் முக்கியத்துவம் பற்றியும் இந்தப் பண்பைப் பற்றியும் எடுத்துரைத்துள்ளார்கள். இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இதன் பக்கம் குறிப்பாக கவனமூட்டியுள்ளார்கள். இன்னும் சொல்வதென்றால் தமது வருகையின் நோக்கத்தில் ஒன்றாக, மார்க்கத்திற்காக பயணம் செய்து வருகின்ற விருந்தினர்களுக்காக விருந்தோம்பல் செய்வதையும் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ''இந்தப் பணியின் மூன்றாவது கிளையானது இங்கு வருபவர்கள், செல்பவர்கள் மற்றும் உண்மையைத் தேடுவதற்காக பயணம் மேற்கொள்பவர்கள் மற்றும் ஏனைய நோக்கங்களுக்காக இங்கு வருபவர்களைப் பற்றியதாகும்.'' பிறகு கூறுகின்றார்கள்: ''இந்தக் கிளையும் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருகிறது.'' (ஃபத்ஹே இஸ்லாம். ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 14) இப்படிப்பட்டவர்கள் ஆயிரக்கணக்கில் வருகின்றனர் என்றும் அவர்கள் கூறினார்கள்.

காதியானின் குக்கிராமத்தில் அந்தக் காலத்தில் எந்தவொரு வசதியும் இருக்கவில்லை. விருந்தினர்களின் தேவையை நிறைவேற்றுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அமிர்தசரஸிலிருந்தும் பட்டாலாவிலிருந்தும் பொருள்களைக் கொண்டு வர வைத்தார்கள். அத்தகைய நிலைமைகளில் சில நேரங்களில் மனிதன் கவலையடைந்து விடுகின்றான். ஏனென்றால், போக்குவரத்திற்கான எந்தவொரு வசதியும் அப்போது இருக்கவில்லை. சில மக்களுக்கு நடந்து செல்ல வேண்டியது இருக்கும். பொதுவாக குதிரை வண்டியில்தான் அவர்கள் செல்வர். அத்தகைய நிலைமைகளில் தொலைவிலுள்ள ஒரு பகுதியில் மக்களுக்கு விருந்தோம்பல் செய்வது என்பது மிகவும் கடினமான ஒரு விஷயமாகும். எனவேதான் அல்லாஹ் அவர்களின் உள்ளத்திற்கு வலுவூட்டுவதற்காக முதலிலேயே இவ்வாறு கூறியிருந்தான். அரபியிலுள்ள இல்ஹாமின் மொழியாக்கம் இதுவாகும்: மக்கள் அதிகமாக உம் பக்கம் திரும்புவர். எனவே, தீய ஒழுக்கத்துடன் அவர்களுடன் நடந்து கொள்ளாமல் இருப்பது உம் மீது கடமையாகும். அவர்கள் அதிகமாக இருப்பதைப் பார்த்து நீர் சோர்வடைந்து விடாமல் இருக்க வேண்டும் என்பது கட்டாயமானதாகும்.

(லெக்ஸர் ஸியால்கோட். ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 242)

இன்று உலகில் ஒவ்வொரு மூலையிலும் மாநாடுகள் நடப்பது இந்தக் காட்சியைக் காட்டுகின்றது. மக்கள் அதிகமாக வருகின்றனர். அவர்கள் இங்கு வந்து ஆன்மீக மற்றும் பௌதீக உணவுத் தட்டை பெற்றுக் கொள்கின்றனர். இங்கிலாந்தில் காலத்தின் கலீஃபா இருப்பதால் அதிகமாக உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் விருந்தினர்கள் வருகின்றனர். மார்க்க அறிவைப் பெற வேண்டும் என்பதற்காகவே அவர்கள் வருகின்றனர். தமது ஆன்மீக தாகத்தை அவர்கள் தணித்துக் கொள்ள விரும்புகின்றனர். இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த அடிமைகள் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப தன்னலம் பார்க்காமலும் எதையும் எதிர்பார்க்காமலும் சோர்வடையாமலும் முகம் சுளிக்காமலும் இந்த விருந்தினர்களுக்குத் தொண்டு செய்கின்றனர். இந்த விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதும் மாநாட்டிற்கான ஏற்பாடுகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்வதும் நமது கடமையாகும். மாநாட்டில் அஹ்மதி அல்லாதவர்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் கூட வருகின்றனர். எப்போதும் பணியாளர்கள் செய்கின்ற பணியைப் பார்த்து அவர்கள் சிறந்த தாக்கத்தைப் பெறுகின்றனர். எவ்வாறு சின்னஞ்சிறு சிறுவர்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை எந்த அளவு பொறுப்புடன் செய்து முடிக்கின்றனர் என்பதைப் பார்த்து அவர்கள் வியப்படைகின்றனர்.

கடந்த வருடம் ஒரு விருந்தினர் உகாண்டாவிலிருந்து வந்திருந்தார். அவர் அங்குள்ள அமைச்சரும் ஆவார். அவர் கூறினார்: நான் விருந்தோம்பல் மற்றும் மாநாட்டிற்கான ஏற்பாடுகளைப் பார்த்து வியந்து போனேன். எப்படி மக்கள் தன்னார்வத்துடன் இந்த அளவு தியாகம் செய்கின்றனர்? நான் எத்தகைய ஒரு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக செல்கின்றேன் என்றால் அங்கு மனிதர்கள் அல்ல; மாறாக, மலக்குகள் பணியாற்றுவதை என்னால் பார்க்க முடியும் என்பது எனது கற்பனையில் கூட இருக்கவில்லை. அவர்கள் கூறுகின்றார்கள்: 20 தடவை ஒரு பொருளைக் கேட்டாலும் சிரித்த முகத்துடன் அவர்கள் அதனை நமக்கு தருகின்றனர். பலரும் இந்த விஷயத்தைக் கூறினர். சிறுவர்கள் உணவு வழங்குகின்ற பணியில் ஈடுபட்டவாறு மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சி நிறைந்த முகத்துடன் உணவு வழங்கிக் கொண்டிருப்பர் அல்லது கூடாரங்களில் மக்கள் குடிப்பதற்கு மிகவும் மலர்ந்த முகத்துடன் மீண்டும் மீண்டும் தண்ணீர் வேண்டுமா? என்று கேட்டனர். முக்கிய விருந்தினர்களுடன் மட்டும் அவர்கள் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. மாறாக, ஒவ்வொரு விருந்தினர்களுடனும் அவர்கள் அவ்வாறே நடந்து கொண்டனர். இந்தத் தொண்டுணர்வின் பண்புதான் அஹ்மதிய்யா ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு பணியாளரின் சிறப்புத் தன்மையாகவும் இருக்கின்றது. இருக்கவும் வேண்டும். இந்த சிறப்பான பண்பை அவர்கள் எப்போதும் உயிருடன் வைத்திருக்க வேண்டும். அவர்கள் எந்தத் துறையில் பணியாற்றுபவர்களாக இருந்தாலும் சரியே. நமது மாநாட்டிற்கு விருந்தினர்கள் வருகின்றபோது பல்வேறு துறைகளுடன் அவர்கள் தொடர்பு கொள்ள வேண்டியது வருகின்றது. அவர்கள் வந்ததும் வரவேற்புத் துறையுடன் அவர்களுக்கு தொடர்பு ஏற்படுகின்றது. விருந்தாளி பயணம் செய்து வரும்போது அவருக்கு சோர்வும் ஏற்படுகின்றது. பயணத்தில் எந்த அளவு வசதி செய்யப்பட்டிருந்தாலும் இந்தக் காலத்திலும் பயணத்தினால் ஏற்படும் களைப்பும் சோர்வும் இருக்கத்தான் செய்கின்றது. எனவே, வரவேற்புத்துறை இந்த விஷயத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். விமான நிலையத்தில் வரவேற்புத்துறை தனது பணியைச் செய்கின்றது. பொதுவாக அதற்கான நல்ல ஏற்பாடு இருக்கின்றது. ஆனால், சில அண்டை நாடுகளிலிருந்து பயணம் செய்து வருகின்ற விருந்தினர்கள் அல்லது பேருந்து மூலமாக பயணம் செய்து வரும்போது பல மணி நேரங்கள் அவர்கள் பயணம் செய்து வருகின்றனர். அதனால் அவர்களுக்கு சோர்வும் ஏற்படுகின்றது. எனவே, வரக்கூடிய இவர்கள் ஜமாஅத் ஏற்பாடு செய்துள்ள தங்குமிடங்களில் தங்கும்போது அங்கு பணியில் இருப்பவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ள இந்த விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்கள் சகோதரரை புன்சிரிப்புடன் சந்தியுங்கள். இது ஸதக்கா ஆகும். (சுனனுத் திர்மிதி அப்வாபுல் பிர்ரி வஸ்ஸிலா. பாபு மாஜாஅ ஃபீ தலாகத்தில் வஜ்ஹி. ஹதீஸ் எண் 1970) பிரிதொரு சந்தர்ப்பத்தில் அன்னார் இவ்வாறும் கூறினார்கள்: ''சாதாரணமான ஒரு நன்மையையும் அற்பமாகக் கருதாதீர்கள். உங்கள் சகோதரரை மலர்ந்த முகத்துடன் சந்திப்பதும் நன்மையாகும்.'' (ஸஹீஹ் முஸ்லிம். கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா.... பாபு இஸ்திஹ்பாபு தலாகத்தில் வஜ்ஹி. ஹதீஸ் எண் 2626)

இஸ்லாத்தின் போதனை எவ்வளவு அழகான போதனை என்று பாருங்கள். விருந்தினர்களைக் கண்ணியப்படுத்த வேண்டும் என்ற கட்டளையும் இருக்கின்றது. இது எத்தகைய கட்டளை என்றால் அதை பேணுவதில் நற்கூலி இருக்கின்றது. பிறகு இவ்வாறு விருந்தோம்பல் செய்வதும் வரும் விருந்தினர்களுடன் புன்சிரிப்புடன் பேசுவதும் தர்மம் வழங்குகின்ற செயலுக்கு ஒப்பானதாகும். இதை தர்மம் வழங்குகின்ற செயலுக்கு ஒப்பானதாக ஆக்கி அத்துடன் நற்கூலி பெறுவதற்கும் அது காரணமாக இருக்கின்றது என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு இரண்டு நற்கூலி அவருக்கு கிடைக்கின்றது. ஒன்று, விருந்தோம்பல் செய்ததற்கான கூலி. மற்றொன்று, நல்லொழுக்கத்துடன் நடந்து கொண்டதன் விளைவாக தர்மம் வழங்குகின்ற செயலுக்கு ஒப்பான நற்கூலி அவருக்கு கிடைக்கின்றது. அன்புடன் பேசுவதும் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தும் விதமாக பேசுவதும் நன்மையாகக் கணக்கிடப்படுகின்றது. இந்த நன்மைக்காக

எந்த அளவு நற்கூலியை வழங்க வேண்டும் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். பிறருக்கு வழியைக் காட்டிக் கொடுப்பதும் கூட ஒரு தர்மமாகும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுல் ஜிஹாதி வஸ்ஸைரி. பாபு ஃபஸ்லு மல் ஹமல மதாஅன் ஹதீஸ் எண் 2891)

எந்த துறை இந்தப் பணிக்காக நியமிக்கப்பட்டிருக்கின்றதோ அது இதனை கருத்தில் கொள்ள வேண்டும். பயணம் செய்து வருகின்ற பயணிகளை நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தியவாறு சந்திக்க வேண்டும். பிறகு தன்னார்வத் தொண்டர்களின் மூலமாக அவர்கள் தங்குகின்ற இடத்திற்கு அவர்களை கொண்டு சேர்க்க வேண்டும். குறிப்பாக ஆண்கள் தம்முடன் வராத நிலையில் பெண்கள் தமது குழந்தைகளுடன் வரும்போது அவர்களை அவர்கள் தங்குகின்ற இடங்கள் வரை கொண்டு சேர்ப்பது வரவேற்புத்துறையுடன் தொடர்புடைய இந்த துறையின் பணியாகும். இது மிகவும் அவசியமான விஷயமாகும். சில நேரங்களில் பொருள்களைத் தூக்குவதற்கு ஆள் தேவைப்படும். அவ்வாறு உதவி செய்ய வேண்டும். அதே போன்றே புன்சிரிப்புடனும் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தியவாறும் பேசுவது வரவேற்புத் துறையைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் அல்லாமல் எல்லா துறையைச் சார்ந்தவர்களுக்கும் அவசியமானதாகும். இன்றைய நிலைமைகளின் காரணமாக AIMS Card –ஐ வைத்துக் கொள்வது அவசியமானதாகும். வெளியிலிருந்து வருபவர்கள் கடிதம் மற்றும் அவர்களைப் பற்றி விபரங்களை உடன் கொண்டு வருகின்றனர். பிறகு அவர்களுக்கு இங்கு ஆண்டு மாநாட்டிற்கான கார்டு ஆயத்தம் செய்து வழங்கப்படுகின்றது. சில நேரங்களில் இத்தகைய விவகாரங்களும் நமக்கு முன்னால் வருகின்றன. அதாவது, வருபவர்களை உறுதிப்படுத்துகின்ற கடிதங்கள் இருப்பதில்லை. அப்படிப்பட்ட நிலைமைகளில் அவர்களைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமானதாகும். அதில் திருப்தி கிடைக்கவில்லை என்றால் அவர்களுக்காக கார்டை தயார் செய்ய முடியாது. அவர்களை உறுதிப்படுத்துகின்ற பணிகள் நடக்க வேண்டும். ஆனால், இந்தத் தருணத்தில் அவர்களுடன் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்வதும் அவர் காத்திருப்பதற்கான பொருத்தமான ஏற்பாட்டை செய்வதும் மிகவும் அவசியமானதாகும். சிலர் தங்களுடன் சிறு குழந்தைகள் வைத்திருக்கும் நிலையில் நீண்ட நேரம் காத்திருப்பதனால் அமைதியிழந்து விடுகின்றனர். முதலாவதாக, ஆண்டு மாநாட்டிற்கு வரக்கூடிய ஒவ்வொரு விருந்தினரும் ஜமாஅத் அவர்களை உறுதிப்படுத்துகின்ற கடிதத்துடன் வர வேண்டும் அல்லது AIMS Card –ஐ கொண்டு வர வேண்டும். ஏதாவதொரு காரணத்தால் அதை அவர்கள் எடுக்காமல் வந்து விட்டால் அதனுடன் தொடர்புடைய துறை அவர்களுக்கு தேவையான வசதியை செய்து தர வேண்டும். அதாவது அவர்கள் நிம்மதியாக உட்காருவதற்கான ஏற்பாடு இருக்க வேண்டும்.

பிறகு உணவு வழங்கும் விருந்தோம்பலுடன் தொடர்புள்ள விஷயங்கள் உள்ளன. ஜமாஅத் ஏற்பாடு செய்துள்ள தங்குமிடங்களில் தங்குகின்ற விருந்தினர்களும் இருக்கின்றனர். அவர்கள் இரு வேளை அல்லது மூன்று வேளை உணவு சாப்பிடுகின்றனர். அவர்களுக்கு விருந்தோம்பல் செய்வது அவசியமானதாகும். மாநாடு நடக்கின்ற மூன்று நாட்களிலும் மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரும் பொதுவாக மாநாட்டைக் கேட்பதற்காக வருகின்ற ஒவ்வொரு விருந்தினரும் ஜமாஅத் ஏற்பாட்டின்கீழ் குறைந்தபட்சம் மதிய உணவைச் சாப்பிடுகின்றார். உணவு வழங்குகின்ற அதிகாரிகளும் அவர்களுக்கு ஒத்துழைப்பு தருபவர்களும் அவர்கள் விருந்தினர்களுடன் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்வது விருந்தினர்களுக்குரிய உரிமையாகும். மேலும் அது விருந்தோம்பல் செய்பவரின் கடமையாகும். சிலர் உணவு உண்ணும் விஷயத்தில் பணியில் இருப்பவர்களை துன்பத்தில் ஆழ்த்துகின்றனர். இது வேண்டும்; அது வேண்டும் என்று கேட்கின்றனர். ஆனால், எவ்வாறிருப்பினும் பணியாளர்கள் அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். உணவு எத்தகையது என்றால் அதில், உணவு வழங்குபவர் பொருத்தமற்ற முறையில் நடந்து கொள்வது மற்றும் தேவையில்லாமல் விமர்சனம் செய்வது அல்லது ஏதாவதொரு விஷயத்தைக் கூறுவது விருந்தினர்களின் உணர்வைக் காயப்படுத்துகின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் செய்யும் போது காட்டிய முன்மாதிரி எப்போதும் பொன்னெழுத்துக்களால் எழுதப்படும். ஒரு நபித்தோழருக்கு விருந்தினரை தன்னுடன் அழைத்துச் செல்லுமாறும் அவருக்கு உணவு வழங்குமாறும் பெருமானார் (ஸல்) அவர்கள் கட்டளையிட்ட போது, அந்த நபித்தோழர் அவர்களது கட்டளைக்கு செவிசாய்த்தவாறு அந்த விருந்தினரை தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். ஆனால், அவரது மனைவி வீட்டில் உணவு கொஞ்சம்தான் இருக்கின்றது என்று கூறினார். கணவன் மனைவி இருவரும் ஆலோசனை செய்தனர். குழந்தைகளை எப்படியாவது தூங்க வைத்து விட்டு விருந்தினருக்கு உணவை எடுத்து வைக்கும் போது விளக்கை அணைத்து விட வேண்டும். வீட்டிலுள்ளவர்கள் இருட்டில் தாங்களும் உணவு உண்பதைப் போன்று பாவனை செய்ய வேண்டும். அதனால் விருந்தினர் நிம்மதியாக உணவை உண்ண வேண்டும். அவருக்கு வீட்டிலுள்ளவர்கள் உணவு உண்ணவில்லை என்ற உணர்வு ஏற்பட்டு விடக் கூடாது என்று அவர்கள் முடிவெடுத்தனர். அவர்களது இந்தத் திட்டத்தைப் பற்றி எந்நிலையிலும் விருந்தினருக்கு எதுவும் தெரியவில்லை. வீட்டில் இருந்தவர்கள் இவ்வாறு விருந்தோம்பல் செய்தனர். விருந்தாளியும் மிகவும் நிம்மதியாக உணவு உண்டார். காலையில் அந்த அன்ஸாரி நபித்தோழர் பெருமானார் (ஸல்) அவர்களது சமூகத்தில் வந்தபோது இரவு நேரத்தில் நீங்கள் செய்த விஷயம் மற்றும் உங்களது வழிமுறையைப் பார்த்து அல்லாஹ் கூட சிரித்தான் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபு மனாகிபில் அன்ஸாரி. பாபு கவ்லுல்லாஹி தஆலா அஸ்ஸ வஜல் ஹதீஸ் எண் 3798)

இந்தத் தியாகத்தை அந்தக் குடும்பத்தினர் செய்ததற்கான காரணம் அந்த விருந்தாளி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விருந்தாளி ஆவார் என்பதேயாகும். குறிப்பாக இதனாலேயே அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டனர். பொதுவாக நபித்தோழர்கள் எல்லா விருந்தினர்களுக்கும் சிறந்த முறையில் விருந்தோம்பல் செய்து வந்தனர். ஆனால், குறிப்பாக இவ்வாறு நடந்து கொண்டது அவர் பெருமானார் (ஸல்) அவர்களின் விருந்தினராக இருந்ததனாலேயாகும். இன்று ஒவ்வொரு பணியாளரும் தியாகம் செய்வதற்கான காரணம் என்னவென்றால், அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடியாரின் விருந்தினர்களுக்கு தொண்டு செய்கின்றனர். பணியாளர்கள் இந்த உணர்வுடன்தான் அவர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும்.

பசியுடன் இருந்தவாறு தங்களது உணவை விருந்தினருக்கு வழங்கிய இந்த தியாகம், எதுவரையென்றால், தங்களது குழந்தைகளைப் பசியுடன் தூங்க வைத்த இந்த தியாகம் மிகப்பெரும் தியாகம்தான். இன்று இப்படிப்பட்ட தியாகத்தை நாம் செய்ய வேண்டிய தேவையில்லை. அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள வாக்குறுதிக்கு ஏற்ப உலகில் ஒவ்வோரிடத்திலும் ஜமாஅத்துகள் வலுவான அடித்தளங்களில் நிலைத்து நிற்கின்றன. லங்கர் (விருந்தகம்) செயல்பட்டு வருகின்றது. குறிப்பாக மாநாட்டின் நாட்களில் இதற்கான சிறப்பான ஏற்பாடு இருக்கின்றது. லங்கரிலிருந்து உணவைக் கொண்டு வந்து அதை விருந்தினர்களுக்கு வழங்குகின்ற தொண்டினை மட்டும்தான் நாம் செய்ய வேண்டியது இருக்கின்றது. மேலும், விருந்தினர்களுடன் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும். மார்க்கத்திற்காக பயணம் செய்து வருகின்ற விருந்தினருக்குத் தொண்டு செய்கின்ற இந்த விஷயத்தில் அல்லாஹ் மகிழ்ச்சி அடைகின்றான். சரியான முறையில் விருந்தோம்பல் செய்யப்படாமல் இருந்தால் அல்லாஹ்வின் புறமிருந்து வெறுப்பின் வெளிப்பாடும் இருக்கின்றது. ஒரு சந்தர்ப்பத்தில் சில விருந்தினர்களுடன் வழக்கத்திற்கு மாற்றமாக மிகவும் நல்ல முறையில் சிலர் நடந்து கொண்டனர். சில விருந்தினர்களை முற்றிலும் புறக்கணித்து விட்டனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் காலத்தில் என்ன ஏற்பாடுகள் இருந்தனவோ அதற்கேற்ப இந்த எல்லா வேலைகளையும் விருந்தோம்பல் செய்கின்ற பணியில் இருந்த சிலர் செய்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் இரவில் பகட்டாக நடந்து கொள்ளப்பட்டது என்று தெரிவித்தான். அவர்கள் செயற்கையாக நடந்து கொண்டனர். சரியான முறையில் விருந்தினர்களுக்கு தொண்டு செய்யப்படவில்லை. சில ஏழைகள் சாப்பிடாமல் இருந்தனர் என்று அல்லாஹ் அவர்களுக்கு தெரிவித்தான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அந்தப் பணியாளர்கள் மீது வெறுப்படைந்ததுடன் அந்த ஏற்பாட்டை தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டார்கள். இன்னும் சொல்வதாயின், ஓர் அறிவிப்பில் இவ்வாறும் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் பணியில் இருந்த அவர்களை ஆறு மாதங்கள் வரை காதியானை விட்டே வெளியேற்றி விட்டார்கள். (தத்கிரா பக்கம் 689 நான்காம் பதிப்பு 2004)

எனவே, தொண்டு செய்வதற்காக நம்மை நாமே அர்ப்பணிக்கின்றபோது பிறகு எவ்வித பாகுபாடுமின்றி ஒவ்வொருவருக்கும் தொண்டு செய்ய வேண்டும். மாநாட்டிற்கு வருகின்ற ஒவ்வொரு விருந்தாளியும் ஆண்டு மாநாட்டின் விருந்தாளியாக இருக்கின்றார். ஒவ்வொருவரிடமும் நல்ல முறையில் நடந்து கொள்வதும் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதும் அவசியமானதாகும். இவர் பணக்காரர் ஆவார். இவர் சிறப்பு விருந்தினர் ஆவார். இவருக்கு குறிப்பிட்ட இடத்தில் உணவு வழங்க வேண்டும். இவருக்கு அவ்வாறு செய்யக் கூடாது என்ற பாகுபாடு இருக்கக் கூடாது. ஆனால், பொதுவாக அஹ்மதிகள் அனைவரும் ஒரே இடத்தில் தான் உணவு உண்ண வேண்டும். சிறப்பு விருந்தினர்களுக்காக தனியாக இடம் வைக்கப்பட்டிருக்கின்றதால் அது அஹ்மதியல்லாத மற்றும் முஸ்லிம் அல்லாத விருந்தினர்களுக்காக வைக்கப்பட்டிருக்கின்றது. அவர்களை மட்டுமே அந்த இடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். மாநாட்டு அமைப்பாளர்கள் இதனை கருத்தில் கொள்ள வேண்டும். சில பணியாளர்கள் தமக்கு தெரிந்த சிலரை சிறப்பு விருந்தினர்கள் உள்ள இடத்திற்கு உணவு உண்பதற்காக அழைத்துச் செல்கின்றனர். எனவே, அஹ்மதி பொறுப்பாளராக இருந்தாலும் சரி அல்லது அவர் யாராக இருந்தாலும் பொதுவாக விருந்தினர்கள் உணவு உண்கின்ற இடத்தில் தான் அவரும் சாப்பிட வேண்டும். பிறகு இதற்காக துஆவும் செய்ய வேண்டும்.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் விருந்தினருக்கு செய்கின்ற இந்த சிறிய தொண்டை ஏற்றுக் கொள்வானாக! நமது பணிகள் எல்லா விதமான வெளி வேஷங்களிலிருந்தும் வெற்றிடமாக இருக்க வேண்டும். முழுக்க முழுக்க கலப்பற்ற முறையில் அது அல்லாஹ்வுக்காக செய்யப்பட வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் காலத்தில் சில நாட்களில் விருந்தினர்களின் வருகை எந்த அளவு அதிகமாக இருந்ததென்றால் அவர்களை தங்க வைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வது கடினமாக இருந்தது. காதியான்

மிகவும் சிறிய இடமாக இருந்தது. ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், நீர் கவலைப்பட வேண்டாம்; சோர்வடையவும் வேண்டாம் என்ற அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப எவ்வித செயற்கைத் தன்மையும் இல்லாமல் விருந்தினர்களுக்கு என்ன வசதிகளை செய்து தர முடியுமோ அதை செய்து தந்தார்கள். சில நேரங்களில் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களும் வந்தன. குளிர் காலத்தில் விருந்தினர்கள் அதிகமாக வந்து விட்ட காரணத்தால் தன்னுடைய மற்றும் தனது குழந்தைகளுடைய சூடான படுக்கையை விருந்தினர்களுக்கு அவர்கள் வழங்கி விட்டார்கள். (சீரத்துல் மஹ்தி தொகுதி 2 நான்காம் பாகம், பக்கம் 91-92, அறிவிப்பு எண்.1118)

ஒரு முறை எந்த அளவு விருந்தினர்கள் அதிகமாக வந்து விட்டனர் என்றால் ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் அம்மா ஜான் அவர்கள் இந்த விருந்தினர்கள் எங்கு தங்குவார்கள்? இவர்களுக்கான ஏற்பாட்டை எப்படி செய்வது? என்று மிகவும் கவலை அடைந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அவர்களுக்கு ஒரு கதையைக் கூறினார்கள். காட்டில் ஒரு பயணி இரவில் வந்து கொண்டிருந்தார். இரவில் இருள் நிறைந்திருந்தது. அருகில் அவர் தங்குவதற்கும் ஓய்வெடுப்பதற்கும் எந்தவொரு சிற்றூரும் நகரமும் எந்தவோர் இடமும் இருக்கவில்லை. அந்த அப்பாவி இரவைக் கழிப்பதற்காக ஒரு மரத்தடியில் படுத்தார். அந்த மரத்தின் மேல் பறவைகளின் ஒரு கூடு இருந்தது. அதிலிருந்த ஆண் பறவையும், பெண் பறவையும் இந்த மரத்தடியில் படுத்திருக்கின்ற இந்த நபர் நமது விருந்தாளி ஆவார். எனவே, அவருக்கு விருந்தோம்பல் செய்வது நமது கடமையாகும் என்று கூறியது. அவை எவ்வாறு விருந்தோம்பல் செய்தனவென்றால், இரவு குளிராக இருப்பதால் நமது விருந்தாளிக்கு குளிர் அடிக்கும். எனவே, அவர் நெருப்பு மூட்டி குளிர் காய்வதற்கு நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்று அவை முடிவெடுத்தன. பிறகு நம்மிடம் வேறு எதுவும் இல்லை. எனவே, நாம் நமது கூட்டைக் கீழே எறிந்து விடுவோம். அதிலுள்ள வைக்கோல் மற்றும் குச்சிகளை வைத்து விருந்தாளி நெருப்பு மூட்டி குளிர் காய்வார் என்று அவை நினைத்தன. அவ்வாறே அவை தமது கூட்டை கீழே எறிந்தன. அந்த நபர் அதைக் கொண்டு நெருப்பு மூட்டி குளிர் காய ஆரம்பித்தார். பிறகு அந்தப் பறவைகள் அவருக்கு உணவாக கொடுப்பதற்கு நம்மிடம் வேறு எதுவும் இல்லை. நாமே அந்த நெருப்பில் விழுந்து விடுவோம். நாம் நெருப்பில் விழுந்து விட்டால் இந்த விருந்தாளி நம்மை உண்பார் என்று அவை முடிவெடுத்து அப்படியே செய்தன. இவ்வாறு அவை விருந்தாளிக்கு உணவிற்கான ஏற்பாட்டை செய்தன. (ஹஸ்ரத் ய.்.கூப் அலி இர்.்.பானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுதிய ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது பக்கம் 130-131)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்தக் கதையை கூறியதன் நோக்கம் என்னவென்றால், விருந்தாளி வந்தால் கவலைப்படுவதற்குப் பகரமாக மனிதன் முடிந்தவரை தனது சக்திக்கேற்ப தியாகம் செய்தவாறு விருந்தினர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்பதை உணர்த்துவதற்கே ஆகும். எனவே, இதில் நம் அனைவருக்கும் பாடம் இருக்கின்றது. குறிப்பாக, எவர்கள் இந்தப் பணிக்காக தம்மை அர்ப்பணிக்கின்றனரோ அவர்களுக்கு இதில் பாடம் இருக்கின்றது. அவர்கள் தமது பொறுப்புகளுக்குரிய உரிமையைச் செலுத்துவதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும்.

டியூட்டியைப் பொருத்தவரையில் பல்வேறு டியூட்டிகள் உள்ளன. பல்வேறு துறைகள் இருக்கின்றன. கார் பார்க்கிங் செய்வதற்காகவும் ஒரு துறை இருக்கின்றது. இது மிகவும் முக்கியமான துறையாகும். சில நேரங்களில் விருந்தினர்கள் இங்கு மிகவும் தவறான வழிமுறையையும் மேற்கொள்கின்றனர். பணியில் இருப்பவர்கள் வழங்கும் வழிகாட்டலுக்கேற்ப பார்க்கிங் செய்ய முடியாது என்பதில் பிடிவாதமாக இருக்கின்றனர். தங்களது விருப்பத்திற்கேற்ப பார்க்கிங் செய்ய விரும்புகின்றனர். அப்படிப்பட்ட சூழ்நிலையில் பணியாளர்கள் முடிந்தவரை மென்மையைக் கடைபிடித்தவாறு அவர்களுக்கு புரிய வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். பிறகு தங்களுக்கு மேல் இருக்கும் அதிகாரிகளுக்கு இதைப் பற்றி தகவல் கொடுக்க வேண்டும். கடந்த வருடமும் இது போன்ற புகார்கள் கூறப்பட்டன. காரில் வந்த பெண்கள் அல்லது சில பெண்கள் நாங்கள் காரை இன்னும் முன்னே கொண்டு செல்வோம் என்று கூறினர். அப்போது அங்கு டியூட்டியில் இருந்தவர் அவர்களிடம் கடுமையாகப் பேசியுள்ளார். சந்தேகமின்றி டியூட்டியில் இருக்கின்ற ஒவ்வொருவரும் தமது பொறுப்பை நிறைவேற்றுவது அவர்களது கடமையாக இருக்கின்றது.

இன்றைய நிலைமைகளுக்கு ஏற்ப மிகவும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டியதுள்ளது. குறிப்பாக, பார்க்கிங் விஷயத்தில் அவ்வாறு நடந்து கொள்ள வேண்டியது இருக்கின்றது. ஆனால், அத்துடன் நமது நல்லொழுக்கத்தையும் நாம் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். ஒருவர் சரியான கோரிக்கை வைத்தால், எவராவது நோயாளியாக இருந்தால் அல்லது வேறு ஏதாவது காரணம் இருந்தால் அவருக்கு நிதானமாகப் புரிய வையுங்கள். எனக்கு மேலுள்ள அதிகாரிகளை நான் அழைக்கின்றேன். அவர் உங்களுக்கு ஏதாவதொரு வகையில் வசதி செய்து தருவார் என்று அவரிடம் கூறுங்கள். ஆனால், இந்தத் தருணத்தில் நீங்கள் ஒருபக்கம் அமைதியாக நில்லுங்கள் என்று அவரிடம் கேட்டுக் கொள்ளுங்கள். விருந்தினர்களும் அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும். இதன் காரணமாக மற்ற டிராஃபிக்கில் எந்த பாதிப்பும் ஏற்பட்டு விடக் கூடாது. ஏனென்றால், சில நேரங்களில் இந்த விவாதத்திலும் சண்டையிலும் கார்களின் ஒரு நீண்ட வரிசை நகராமல் அங்கேயே நின்று விடுகின்றது. இதனால் பாதிப்பு ஏற்படுகின்றது. சரியான நடவடிக்கை எடுக்க ஆரம்பித்த பிறகு மக்கள் மாநாட்டுத் திடலில் வருகின்றபோது அங்கு அமர்ந்திருப்பவர்களுக்கு அதனால் இடையூறு ஏற்படுகின்றது. கடந்த வருட மாநாட்டில் நமக்கு முன்னால் வந்துள்ள ஒவ்வொரு பிரச்சனையையும் கருத்தில் கொண்டவாறு மாநாட்டு அமைப்பாளர்கள் அதற்கான தீர்வையும் அதை சரி செய்வதற்கு சாத்தியமுள்ள அம்சங்களையும் பற்றி ஆய்வு செய்ய வேண்டும். ஒவ்வொரு துறையும் தனக்கு முன்னால் உள்ள இந்த விவகாரம் தொடர்பாகவும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். எவ்வாறு இதற்கு தீர்வு காணலாம்? என்பதை பற்றியும் அஃப்ஸர் ஜல்ஸா ஸாலானா அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இதன் காரணமாக இந்த முறை குறைந்தபட்ச அளவிலேயே பிரச்சனைகள் இருக்க வேண்டும். சிறு சிறு பிரச்சனைகள் உருவாகத்தான் செய்யும். ஆனால், முடிந்தவரை அவை குறைவாக இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஸ்கேனிங் மற்றும் செக்கிங்கிற்காகவும் எல்லா வகையான முன்னெச்சரிக்கை –யுடன் கூடிய ஏற்பாடு இருக்க வேண்டும். நீண்ட நேரம் மக்களுக்கு காத்திருக்க வேண்டிய நிலைமை இருக்கக் கூடாது. மேலும், எவ்வகையிலும் அவர்களுக்கு சிரமம் ஏற்படக் கூடாது. மக்கள் நுழைகின்ற வாயிலிலும் மாநாட்டுத் திடலின் நுழைவாயிலும் மீண்டும் மீண்டும் இந்த அறிவிப்பு செய்யப்பட வேண்டும். வருபவர்கள் தங்களது கார்டுகளையும் முன்னால் வையுங்கள். அவர்கள் தங்களது வரிசையில் சரியாக நின்று வர வேண்டும் என்று அறிவிப்பு செய்ய வேண்டும். இதன் மூலமாக விரைவாகவும் சீக்கிரமாகவும் மக்கள் அந்த இடத்தைக் கடந்து செல்ல முடியும். துப்புறவுப் பணியிலுள்ள பணியாளர்கள் இரண்டு இடங்களிலும் அதாவது ஆண்கள் மற்றும் பெண்கள் தத்தமது இடங்களில் மக்கள் அசுத்தங்களை அதிகமாக போடுகின்றனர் என்று கவலைப்படுகின்றனர். ஒத்துழைப்பு நல்குபவர்கள் மீண்டும் மீண்டும் அறிவிப்பு செய்து அதைப் பற்றி கவனமூட்டியவாறு தூய்மையின் பக்கம் கவனம் செலுத்துங்கள். தூய்மை ஈமானின் ஒரு பகுதியாகும். எனவே, உங்கள் சுற்றுப் புறத்தையும் தூய்மையாக வைத்திருங்கள் என்று கூற வேண்டும். பொதுவாக மக்கள் இவ்விஷயத்தில் ஒத்துழைப்பு தருகின்றனர். கடந்த வருட அறிக்கையிலும் இவ்வாறே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எவராவது இவ்விஷயத்தில் ஒத்துழைப்பு தராமல் இருந்தாலும கூட பணியாளர்கள் தாமே அவற்றை சுத்தம் செய்ய வேண்டும். இதுவே அவர்களது டியூட்டியாக இருக்கின்றது. எவ்வகையிலும் எவரிடமிருந்தும் தீய ஒழுக்கம் வெளிப்படுத்தப்படக் கூடாது என்பதை கருத்தில் கொள்ளுங்கள். ஒருபோதும் பொறுமையைக் கடைபிடிப்பதை கை விட்டு விடக் கூடாது. இவ்வாறே பொதுவாக மாநாட்டுத் திடலை தூய்மையாக வைத்திருப்பதும் பணியாளர்களின் வேலையாகும். குழந்தைகள் சில நேரத்தில் Glass, Box, Paper, Rapper போன்றவற்றை எறிந்து விடுகின்றனர். பெரியவர்களும் கூட சில சமயங்களில் இவ்வாறு எறிகின்றனர். ஆண்கள் பகுதியிலும் பெண்கள் பகுதியிலும் இவற்றைப் பார்க்கும்போது அவற்றை அங்கிருந்து உடனுக்குடன் அகற்றி அந்த இடத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இதனால் Wind up பணிகளைச் செய்கின்றவர்களின் பணியும் எளிதாகி விடும். ஏனென்றால், மாநாட்டுத் திடலிலுள்ள கூடாரங்களையும் பிற பொருள்களையும் தூக்குவது மட்டும் அவர்களது பணியல்ல. மாறாக, ஒவ்வொரு அசுத்தத்தை அகற்றுவதும், காகிதம் போன்றவற்றை அங்கிருந்து அகற்றுவதும் அந்த இடத்தை தூய்மையாக வைத்திருப்பதும் அவர்களுக்கு அவசியமானதாக இருக்கின்றது. விருந்தினர்களுக்கு இதன் பக்கமும் மீண்டும் மீண்டும் நிதானமாக கவனமூட்டிக் கொண்டிருக்க வேண்டும். டின், டப்பா போன்றவற்றை இங்குமங்கும் போடுவதற்குப் பகரமாக அவற்றை Dust Pin –ல் போடுங்கள் என்று அவர்களிடம் கூற வேண்டும்.

மாநாட்டின் தர்பிய்யத் துறையும் இந்த வகையிலும் துடிப்புடன் செயல்பட வேண்டும். அது மாநாட்டிற்கு வருபவர்களுக்கு, மாநாடு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர்களுக்கு மாநாட்டின் முக்கியத்துவத்தைப் பற்றி கவனமூட்ட வேண்டும். இதற்காக தன்னை அர்ப்பணித்துள்ள பணியாளர் தன்னலம் பாராமல் இந்தப்

## கிளை அமைப்புகளின் வருடாந்திர இஜ்திமாக்கள் 2016 நடைபெறும் தேதிகள் பற்றிய அறிவிப்பு

*ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் காதியான் தாருல் அமானில் கீழ்க்காணும் தேதிகளில் கிளை அமைப்புகளின் இஜ்திமாக்களை நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். சகோதர சகோதரிகள் இந்த ஆன்மீக இஜ்திமாவில் கலந்து கொள்வதற்காக இப்போதிருந்தே ஆயத்தமாகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

- *இந்திய லஜ்னா இமாயில்லாஹ் மற்றும் நாஸிராத்துல் அஹ்மதிய்யாவின் இஜ்திமா 2016 அக்டோபர் 15 முதல் 17 ஆம் தேதி வரை சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய கிழமைகளில் நடைபெறும்.*
- *இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் அத்ஃபாலுல் அஹ்மதிய்யா இஜ்திமா 2016 அக்டோபர் 15 முதல் 17 ஆம் தேதி வரை சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய கிழமைகளில் நடைபெறும்.*
- *இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் இஜ்திமா 2016 அக்டோபர் 18 முதல் 20 ஆம் தேதி வரை செவ்வாய், புதன், வியாழன் ஆகிய கிழமைகளில் நடைபெறும்.*

பணியைச் செய்வது அவரது கடமையாக இருக்கின்றது. ஆனால், நான் ஏற்கனவே கூறியது போன்று பணியாளர்கள் இந்த உணர்வுடன்தான் பணியாற்றுகின்றனர். ஆனால், சில தவறான வழிமுறைகளையும் அவர்கள் காட்டி விடுகின்றனர். அவர்கள் எப்போதும் நான் ஏற்கனவே கூறிய பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த அறிவுரையை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, எல்லா நிலையிலும் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். ஒவ்வொரு பணியாளரும் பொதுவாக எல்லா நேரங்களிலும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இது பாதுகாப்பில் உள்ளவர்களது பணி மட்டுமல்ல. மாறாக, தூய்மை சார்ந்த ஒவ்வொரு பணியாளரும் தத்தமது சுற்றுப்புறத்தில் தனது பார்வையைச் செலுத்துபவராக இருக்க வேண்டும். பணியாளர்கள் இதையும் நினைவில் கொள்ள வேண்டும். மாநாடு முடிந்த பிறகு Wind up பணிகளைச் செய்கின்ற பணியாளர்கள் மட்டும் அங்கு இருக்கக் கூடாது. மாறாக, எவருக்கு அங்கு டியூட்டி இருக்கின்றதோ அப்படிப்பட்ட எல்லாப் பணியாளர்களும் மாநாட்டுத் திடலில் இருக்க வேண்டும். ஒரு விருந்தாளி அங்கு இருக்கும் வரையில் அல்லது அவர் சார்ந்துள்ள துறையின் உயர் அதிகாரி, இப்போது நீங்கள் போகலாம் என்று அவர் செல்வதற்கான அனுமதியை அவருக்கு தரும் வரையில் அவர் அங்கு இருக்க வேண்டும்.

எல்லாரையும் விட முதலாவதாக பணியாளர்களும் பொதுவாக ஜமாஅத் சகோதரர்களும் அல்லாஹ் அவர்களில் ஒவ்வொருவருக்கும் சிறந்த முறையில் தமது கடமையை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவதற்காக துஆ செய்ய வேண்டும். மாநாடுத் திடலில் பணியில் இருக்கும் எல்லா பணியாளர்களையும் அல்லாஹ் எல்லா வகையிலும் பாதுகாப்பாக வைப்பானாக! சில நேரங்களில் மிகவும் கடினமான பணிகளை அவர்கள் செய்ய வேண்டியது வருகின்றது. காயம் ஏற்படுவதற்கான அபாயமும் அவர்களுக்கு இருக்கின்றது. அல்லாஹ் ஒவ்வொருவரையும் பாதுகாப்பாக வைப்பானாக! அல்லாஹ் மாநாட்டை எல்லா வகையிலும் அருளுக்குரியதாகவும் வெற்றிகரமாகவும் நடக்கும்படி செய்வானாக! ஒவ்வொரு எதிரி மற்றும் தீய இயல்பைக் கொண்டவரின் தீங்கிலிருந்து அல்லாஹ் ஜமாஅத்தை எல்லா வகையிலும் பாதுகாப்பாக வைப்பானாக! ஆண்டு மாநாட்டிற்கு வருகின்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு சிறந்த முறையிலும் தமது நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தி காட்டியவாறும் அவர்களுக்கு தொண்டு செய்வதில் உயர்ந்த தரத்திலுள்ள பணியாளர்களுக்கு எந்த தரத்தை அவர்கள் அடைந்துள்ளரோ அதை விட உயர்ந்த தரத்தை ஒவ்வொரு முறையும் வெளிப்படுத்துபவர்களாக அவர்கள் இருப்பார்களாக! முன்னரை விட அதிகமாக தொண்டு செய்பவர்களாக அவர்கள் ஆக வேண்டும். இதில் எந்த குறைவும் வந்து விடக் கூடாது. நமது ஒவ்வொரு அடியும் முன்னேறியே செல்ல வேண்டும். எல்லா இடத்திலும் இதுபோன்ற தொண்டு செய்யப்படும்போது அத்தகையவர் மீது அல்லாஹ் தனது அன்பின் பார்வையை செலுத்துகின்றான். அல்லாஹ் எல்லாருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

**அருளுக்குரிய ரமலான் மாதத்தில் தஹ்ரீகே ஜதீது சந்தாவை நூறு சதவிகிதம் முழுமையாகச் செலுத்தியவர்களுக்காக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மிகுந்த பரிவுடன் செய்த துஆ**

*ஒவ்வொரு வருடமும் நடப்பது போன்றே இந்த வருடமும் அருளுக்குரிய ரமலான் மாதத்தின் 29 -வது நாளன்று அலுவலகத்தின் தரப்பிலிருந்து தஹ்ரீகே ஜதீது சந்தாவை நூறு சதவிகிதம் முழுமையாகச் செலுத்திய தூய உள்ளம் கொண்ட ஜமாஅத் சகோதரர்களின் பட்டியல் துஆவிற்காக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதைப் பார்த்த பிறகு ஹுஸூர் அவர்கள் கலப்பற்ற தூய உள்ளம் கொண்ட ஜமாஅத் சகோதரர்களுக்காக துஆ செய்துள்ளார்கள்.*

***ஹுஸூர் அவர்கள் தமது கடிதத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:***

***அல்லாஹ் இந்த அனைத்து ஜமாஅத் சகோதரர்களின் வீடுகளையும் தனது அருள்களாலும் கருணையாலும் நிரப்புவானாக! அவர்களது பொருள்களிலும் உயிர்களிலும் அளவற்ற பரக்கத்துகளை வழங்குவானாக! வருங்காலத்திலும் கூட தியாகங்களின் உயர்ந்த தரத்தை நிலைநாட்டுவதற்கான நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக! அல்லாஹ் உங்கள் அனைவரையும் எப்போதும் நேரான வழியில் முன்னேறிச் செல்ல வைப்பானாக! தனது அன்பிற்குரியவர்களின் நெருக்கத்தை உங்களுக்கு வழங்குவானாக! மார்க்க, உலக நன்மைகளுக்கு உங்களை வாரிசாக்குவானாக! ஆமீன்.***

*அல்லாஹ் ஹுஸூர் அவர்களின் துஆக்களிலிருந்து நாமும் பலன் பெறும் வகையில் அவற்றை ஏற்றுக் கொள்வானாக! கலப்பற்ற மனத்தூய்மையுடனும் நன்றியுணர்வுடனும் மிக அதிகமாக தியாகங்கள் செய்வதற்கான நல்வாய்ப்பினை நமக்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக! ஆமீன்.* (*வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது*)

# தஹ்ரீகே ஜதீது சந்தாவை முழுமையாகச் செலுத்துவது ஒரு முக்கிய கடமையாகும்

ஜமாஅத் சகோதரர்கள் அறிந்திருப்பது போன்று தஹ்ரீகே ஜதீதின் வருடம் நவம்பர் 1 ஆம் தேதியிலிருந்து தொடங்கி அக்டோபர் 31 ஆம் தேதியுடன் முடிவடைகின்றது. இந்த வகையில் நடப்பு ஆண்டு முடிவடைவதற்கு இப்போது ஏறக்குறைய இரண்டு மாதங்களே எஞ்சியுள்ளன. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

**"திருக்குர்ஆனில் அல்லாஹ் அவனிடம் செய்யப்படுகின்ற வாக்குறுதிகள் தொடர்பாக கேட்கப்படும் என்று கூறுகின்றான். அதாவது அவை தொடர்பாக பதில் கூற வேண்டியதிருக்கும். எந்த மனிதர் வாக்குறுதி அளிக்காமல் இருக்கின்றாரோ அவர் பலவீனமானவராவார். இறைவன் அவரை அற்பமான பார்வையுடன் பார்ப்பான். ஆனால், எவர் வாக்குறுதியளித்து பிறகு அதை நிறைவேற்றாமல் இருக்கின்றாரோ அவர் குற்றவாளியாவார். இறைவன் அவருக்கு தண்டனை வழங்குவான். எனவே, இந்த வாக்குறுதி சாதாரண விஷயமல்ல. முதலாவதாக, இவ்வளவு மகத்தான பணிக்கு எதிரில் இவ்வளவு சாதாரணமான தியாகத்தைச் செய்வது என்பதே மிகவும் வேதனையான விஷயமாகும். பிறகு வாக்குறதிகளை நிறைவேற்றுவதன் பக்கம் மிகவும் குறைவாக கவனம் செலுத்தப்படுகின்றது என்பது அதை விட அதிகமாக வேதனைக்குரிய விஷயமாகும்."**

(தஹ்ரீகே ஜதீது எக் இலாஹி தஹ்ரீக் தொகுதி 3 பக்கம் 150)

மேலும் கூறுகின்றார்கள்: **"ஆண்களே! பெண்களே! நீங்கள் அஹ்மதிய்யத்தை நேர்மையுடன் ஏற்றுக் கொண்டீர்கள் என்றால், தஹ்ரீகே ஜதீதின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்காக எனக்கு ஒத்துழைப்பு நல்குவது உங்கள் மீது கடமையாகும். பூமி மற்றும் வானத்தின் இறைவன் சாட்சியாக இருக்கின்றான். நான் கூறுபவற்றையெல்லாம் நான் எனக்காக கூறவில்லை. மாறாக, இறைவனுக்காகவும் இஸ்லாத்திற்காகவும் இதை நான் கூறுகின்றேன். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக இதனை நான் கூறுகின்றேன். எனவே, உங்களது உடல், உள்ளம், செல்வம் ஆகியவற்றை இறைவனுக்காகவும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காகவும் தியாகம் செய்ய முன் வாருங்கள்."** (பான்ச் ஹஸார் முஜாஹிதீன் பக்கம் 8)

**அனைத்து மாவட்ட அமீர்களிடமும், உள்ளூர் அமீர்களிடமும், ஜமாஅத் தலைவர்களிடமும், மாவட்ட மற்றும் உள்ளூர் தஹ்ரீகே ஜதீது செயல்களிடமும் நாம் கேட்டுக் கொள்வது என்னவென்றால், அவர்கள் தத்தமது ஜமாஅத்திலுள்ள தூய உள்ளம் கொண்டவர்களின் வாக்குறுதிகளை நூறு சதவிகிதம் முழுமையாக வசூல் செய்வதற்கான தமது முயற்சிகளைத் தீவிரப்படுத்த வேண்டும். அதன் மூலம் இந்திய அஹ்மதிய்யா ஜமாஅத் தமது மகத்தான மரபுகளை நிலைநாட்டியவாறு கிலாஃபத்தின் தர்பாரிலிருந்து கிடைத்துள்ள நடப்பு ஆண்டின் இலக்கை நிறைவு செய்ய வேண்டும். இதன் மூலம் நமது அன்பிற்குரிய ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஏற்றுக் கொள்ளப்படும் துஆக்களிலிருந்து பெரும் பங்கைப் பெறுவதற்கான நற்பாக்கியத்தை நாம் பெற வேண்டும். வபில்லாஹித் தவ்ஃபீக்.**

**அல்லாஹ் தூய உள்ளம் கொண்ட ஜமாஅத் சகோதரர்கள் அனைவரையும் தனது அளவற்ற அருள்கள், கருணைகள் மற்றும் பரக்கத்துகளுக்கு வாரிசாக்குவானாக! ஆமீன்.**

(வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது – காதியான்)

**உலகின் அமைதி இந்த நேரத்தில் நமக்கு முன்னால் இருக்கின்ற எல்லாவற்றையும் விட முக்கியமான மிகவும் நுட்பமாகக் கையாள வேண்டிய பிரச்சனையாக இருக்கின்றது. முழு மனித இனமும் சமுதாயம், குலம், நிறம் மற்றும் இனம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட நிலையில் அமைதி, அன்பு, சகிப்புத்தன்மை, ஒருவர் மற்றவரை மதித்து நடப்பது போன்ற அடிப்படையான மனிதத் தன்மையை வெளிப்படுத்துகின்ற நற்பண்புகளை மேம்படுத்த வேண்டும். அரசாங்கம், மதம் ஆகிய இரண்டுமே எல்லா விதமான காழ்ப்புணர்ச்சியிலிருந்து தூய்மையாக இருக்க வேண்டும்.**

**இடம் பெயர்ந்து வந்துள்ள முஸ்லிம்கள் மற்றும் அடைக்கலம் புகுந்திருப்பவர்களது மார்க்கக் கடமையாக இது இருக்கின்றது. இந்த நாடு அவர்களுக்கு இங்கு வசிப்பதற்கும் இங்கிருந்து பயனடைவதற்குமுள்ள அனுமதியை வழங்கி அவர்கள் மீது செய்துள்ள பேரருளை அவர்கள் எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். இந்த நாட்டிற்குள் அமைதி நிறைந்த நிலையில் இருக்க வேண்டியது அவர்களது கடமையாக இருக்கின்றது. அவர்கள் இந்த நாட்டின் சட்டங்களைப் பேணி நடக்க வேண்டும். அவர்கள் இந்த சமுதாயத்தின் பயனுள்ள பகுதியாகத் திகழ வேண்டும். மேலும், இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் வெற்றிக்காகவும் அவர்கள் உதவி செய்ய வேண்டும்.**

## *சுவீடன் தலைநகரான ஸ்டாக்ஹோமில் 17 மே 2016 -ல் நடைபெற்ற ஒரு வரவேற்பு நிகழ்ச்சியில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஆற்றிய எழுச்சிமிகு சிறப்புரை*

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தமது சொற்பொழிவை பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்று கூறி தொடங்கினார்கள். அதன் ஆங்கில மொழியாக்கத்தையும் கூறினார்கள்.

இதற்குப் பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்-தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

கண்ணியத்திற்குரிய விருந்தினர்களே! உங்கள் அனைவரின் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் கருணையும் உண்டாகட்டும்! எல்லாவற்றிற்கும் முதலாவதாக இந்த சந்தர்ப்பத்தில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக எங்கள் அழைப்பை ஏற்று இன்று இங்கு வந்திருக்கும் உங்களுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

நாம் இந்தத் தருணத்தில் ஒரு கடினமான காலக் கட்டத்தைக் கடந்து வந்து கொண்டிருக்கின்றோம். எனது எண்ணத்தில் உலகின் அமைதி இந்த நேரத்தில் நமக்கு முன்னால் இருக்கின்ற எல்லா-வற்றையும் விட முக்கியமான, மிகவும் நுட்பமாக கையாள வேண்டிய பிரச்னையாக இருக்கின்றது. இந்தக் கஷ்டமான நேரத்தில் நாம் நிலைமைகளை எவ்வாறு எதிர்கொள்ள முடியும். எனது பார்வையில் முழு மனித இனமும் சமுதாயம், குலம், நிறம், இனம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட நிலையில் அமைதி, அன்பு, சகிப்புத்தன்மை, ஒருவர் மற்றவரை மதித்து நடப்பது போன்ற அடிப்படையான மனிதத் தன்மையை வெளிப்படுத்தும் நற்பண்புகளை மேம்படுத்த வேண்டும். ஒரு நபரது கொள்கை மதம் அல்லது இனம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து அவரிடம் மட்டும் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு உலகில் இப்போது எந்த வாய்ப்பும் இல்லை. எனவே, அரசாங்கம், மதம் ஆகிய இரண்டுமே எல்லா வகையான காழ்ப்புணர்ச்சியில் இருந்து தூய்மையாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தனது விருப்பத்திற்கேற்ப கொள்கைகளைப் பின்பற்றி நடப்பதற்கான சுதந்திரம் கிடைக்க வேண்டும். ஏனென்றால், அவரது கொள்கை ஒரு சொந்த விவகாரமாகும். அதன் தொடர்பு அவரது உள்ளம் மற்றும் அவரது மூளை ஆகியவற்றுடன் மட்டுமே இருக்கின்றது. எனவே, ஒவ்வொரு நபருக்கும் தத்தமது மார்க்கப் போதனைகளுக்கு ஏற்ப செயல்படுவதற்கான சுதந்திரம் இருக்க வேண்டும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

நான் இதற்கு முன்னர் கூறியிருந்தது போன்றே இது காலத்தின் தேவையாகும். அதாவது, நாம் உண்மை மற்றும் வெகுகாலம் வரை நீடித்திருக்கின்ற அமைதிக்கான ஆசையை நிறைவேற்றுவதற்காக முயற்சி செய்ய வேண்டும். ஆனால், வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால், முஸ்லிம் நாடுகள் இந்த சமயத்தில் உலகின் உறுதியற்ற தன்மை, போர் மற்றும் சண்டைக்கான தலைமையகமாக ஆகியிருக்கின்றது. ஏனென்றால், இந்த நாடுகளின் அரசாங்கங்களும் தலைவர்களும் தமது மார்க்கத்தின் போதனைகளை முற்றிலும் பொருட்படுத்தாமல் இருக்கின்றனர். ஆனால், மேற்கில் வசிப்பவர்கள் கூட தாங்கள் இந்த ஆபத்திலிருந்து பாதுகாப்பாக இருப்பதாகக் கருதக் கூடாது. ஏனென்றால், இந்தக் காலத்தில் உலகம் சுருண்டு ஓர் உலகளாவிய கிராமமாக ஆகி விட்டது. உலகில் ஒரு பகுதியில் நிலவுகின்ற குழப்பங்களின் தாக்கம் அந்தப் பகுதியின் எல்லைக்குட்பட்டதாக மட்டும் இருக்காது. முஸ்லிம் உலகில் நிலவுகின்ற உறுதியற்ற தன்மை நாளுக்கு நாள் உலகின் மற்ற பகுதிகளிலும் கூட தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். உண்மையில் இதன் நேரடியான தாக்கத்தை இங்கு சுவிடனிலும நம்மால் பார்க்க முடிகின்றது.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

இப்போது நீண்ட பயணங்களில் செல்வது மிகவும் எளிதாகி விட்டது. கடந்த வருடத்தில் கோடிக் கணக்கில் இல்லையென்றாலும் இலட்சக்கணக்கான நபர்கள் போரால் பாதிப்பிற்குள்ளாகி சிரியா மற்றும் ஈராக் போன்ற நாடுகளிலிருந்து தப்பி ஓடியவாறு சிறந்த எதிர்காலத்தை தேடியவாறு இங்கு மேற்கத்திய உலகிற்கு வந்துள்ளனர். சுவீடன் அரசாங்கத்திடமும் சுவீடனிலுள்ள மக்களிடமும் இருக்கின்ற தாராள மனப்பான்மை-யுள்ள திறந்த உள்ளத்தின் காரணமாக இந்த நாடு தனது மக்கள்தொகையின் அடிப்படையில் தமது வசதிக்கும் அதிகமாக இருந்து அடைக்கலம் கோரி வந்தவர்களுக்கு புகலிடம் வழங்கி அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த அளவு அதிக எண்ணிக்கையில் அடைக்கலம் புகுந்தவர்களை தங்களுடன் சேர்த்துக் கொள்வது வெளிப்படையாகப் பார்க்கும்போது மிகவும் அறிவார்ந்த விஷயமாக இருக்கின்றது. அது சுவீடன் கருணையுள்ள மற்றும் தாராள மனப்பான்மையுள்ள உள்ளத்தைக் கொண்ட மக்களால் நிரம்பியிருக்கின்றது என்பதை நிரூபிக்கின்றது. உங்களது தாராள மனப்பான்மை கொண்ட உள்ளமானது இங்கு இடம் பெயர்ந்து வருபவர்களிடமும் அடைக்கலம் புகுந்துள்ளவர்-களிடமும் ஒரு மிகப்பெரும் பொறுப்பை சுமத்துகின்றது. மேலும் அவர்கள் இங்கு வந்து வசிக்க வேண்டும். இங்குள்ள அரசாங்கம் இங்கு வசிப்பவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை அது அவர்களிடம் வேண்டுகின்றது.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

இஸ்லாத்தின் தோற்றுனரான ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் உண்மையில் நமக்கு இந்தப் போதனையை வழங்கியுள்ளார்கள். அதாவது, எந்த நபர் தனது தோழருக்கு நன்றி செலுத்துபவராக இருப்பதில்லையோ அவர் இறைவனுக்கும் நன்றி செலுத்பவராக ஆக முடியாது. எனவே, இடம் பெயர்ந்து வந்துள்ள இந்த முஸ்லிம்கள் மற்றும் அடைக்கலம் புகுந்துள்ளர்-களின் மார்க்கக் கடமையாக இது இருக்கின்றது. அதாவது, இந்த நாடு இவர்கள் இங்கு வசிப்பதற்கும் இங்கிருந்து பயனடைவதற்கும் உரிய அனுமதியை வழங்கி இவர்கள் மீது செய்துள்ள பேரருளை எப்போதும் அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அடைக்கலம் புகுந்துள்ள இவர்கள் அமைதியைத் தேடியவாறு தமது பழைய வாழ்க்கையை விட்டு விட்டு வெளியே வந்தனர். எனவே, இப்போது அவர்களுக்கு சாந்தியும் பாதுகாப்பும் கிடைத்திருக்கும் போது அவர்கள் இந்த நாட்டிற்குள் அமைதி நிறைந்தவர்களாக இருப்பதும் இந்த நாட்டின் சட்டங்களைப் பேணி நடப்பதும் அவர்கள் மீது கடமையாகி விடுகின்றது. அடைக்கலம் புகுந்துள்ள அனைவரும் இந்த சமுதாயத்தின் பயனுள்ள அங்கமாகத் திகழ வேண்டும்.

மேலும் நினைவில் கொள்ளுங்கள். ஒரு முஸ்லிம் என்ற நிலையில் நாட்டின் மீது அன்பு கொள்வது உங்களது ஈமானின் ஒரு கட்டாயப் பகுதியாக இருக்கின்றது என்று இஸ்லாத்தின் நபி ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் போதனை செய்துள்ளார்கள். எனவே, எந்த நாடு இடம் பெயர்ந்து வந்துள்ள இவர்களை ஏற்றுக் கொண்டுள்ளதோ அந்த இடம்பெயர்ந்து வந்தவர்கள் மீது அவர்கள் இந்த நாட்டிற்கு நன்றியுணர்வுமிக்கவர்களாகத் திகழ்வதும் தமது எல்லா தகுதிகளையும் பணி செய்வதற்காக அர்ப்பணித்தவாறு இந்த நாட்டின் முன்னேற்றத்திற்-காகவும் வெற்றிக்காகவும் உதவி செய்வது கடமையாகும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

இதை தவிர இது அரசின் கடமையாகவும் இருக்கின்றது. அதாவது, அவர்கள் இந்த இடம்பெயர்ந்து வந்தவர்களைக் குடியேற்றுகின்ற பணியில் மட்டும் ஈடுபட்டிருக்க வேண்டாம். அதன் விளைவாக தற்போது அங்குள்ள குடிமக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு விடக் கூடாது. முதலிலேயே இத்தகைய அறிக்கைள் உள்ளன. அதில் உள்ளூரிலுள்ள குடிமக்கள் இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு அவர்களை விட அதிகமாக முன்னுரிமை வழங்கப்படுவதாக புகார் கூறியுள்ளனர். ஓர் அறிக்கையின் அடிப்படையில் உள்ளூர்வாசியான ஒரு வயது முதிர்ந்த பெண்ணுக்குப் பொருத்தமான சிகிச்சை வழங்கப்படவில்லை. அவர்கள் மருத்துவமனையில் தங்கியிருந்த சமயத்தில் அவர்களுக்கு முழுமையாக உணவு கூட வழங்கப்படவில்லை. ஆனால், மறுபுறம் இடம் பெயர்ந்து வந்தவர்களை நல்ல முறையில் கவனித்துள்ளார்கள். இந்த அறிக்கைகள் எந்த

EDITOR
MUZZAMMIL AHMAD
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 Thursday 8 SEPTEMBER 2016 Issue No. 27

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

அளவு சரியானதாகும் என்பதை அல்லாஹ் நன்கு அறிவான். ஆனால், இந்த அறிக்கைகளில் ஏதாவது உண்மை இருக்கின்றதென்றால் பிறகு இந்த விஷயம் மிகவும் கவலையளிக்கக் கூடியதும் அபாயகரமானதும் ஆகும். இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு வருங்காலத்திலும் இவ்வாறு முன்னுரிமை வழங்கப்பட்டு வந்தால் அதன் அபாயகரமான விளைவு நமக்கு முன்னால் வரலாம். இவ்வகையிலான அநீதியின் காரணமாக உள்ளூர் மக்களிடம் இயல்பாகவே விருப்பமின்மை மற்றும் அவநம்பிக்கையின் உணர்வுகள் வளர்ச்சி அடையும். அவை எளிதாக இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு எதிராக வெறுப்புணர்வாக மாறலாம். சுவீடனிள்ள இந்த சமுதாயம் ஒரு நீண்ட காலமாக தமது தாராள மனப்பான்மை கொண்ட உள்ளத்தின் காரணமாக அடையாளங் காணப்பட்டு வருகின்றது. ஆனால், அவர்கள் பாகுபாடு காட்டும் விதத்தில் நடந்து கொள்வது அவர்களது நடைமுறையில் திடீரென்று மாற்றத்தைக் கொண்டு வந்து விடலாம். அதன் மூலமாக சமுதாயத்தின் அமைதிக்கு அபாயம் ஏற்படலாம். பிறகு இந்த மாற்றம் இடம்பெயர்ந்து வந்திருப்பது மற்றும் ஒற்றுமையின் நேர்மறையான தாக்கங்களில் இருந்து பயன் பெறுவதற்குப் பதிலாக வெறுப்பு மற்றும் மோதல் அதிகரிப்பதற்கு காரணமாக ஆகி விடலாம்.

*(தொடரும்...)*

**இஸ்லாமிய ஆலிம்களின் ஒன்றுபட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு**

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கூற்றிற்கேற்ப நாங்கள் 72 பிரிவுகளில் இருக்கின்றோம். காதியானி பிரிவு 73 -வது பிரிவாகும். அதுவே இரட்சிப்பிற்குரிய பிரிவாகும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

“நிச்சயமாக இஸ்ரவேல் சந்ததிகள் 72 பிரிவுகளாகப் பிரிந்து விட்டனர். எனது உம்மத் 73 பிரிவுகளாகப் பிரிந்து விடும். ஆனால், ஒரு பிரிவைத் தவிர மற்ற அனைத்து பிரிவுகளும் நெருப்பில் இருக்கும்.” நபித்தோழர்கள் அந்த (இரட்சிப்பிற்குரிய) பிரிவு எது? என்று கேட்டனர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், “அந்தப் பிரிவு எனது மற்றும் என்னுடைய தோழர்களின் நடைமுறைக்கேற்ப செயல்படக் கூடியதாக இருக்கும்” என்று கூறினார்கள். (திர்மிதி கிதாபுல் ஈமான் இஃப்திராக்கி ஹாஸிஹில் உம்மத்தி தொகுதி 2 பக்கம் 89 ஜாமியுஸ் ஸகீர் தொகுதி 2 பக்கம் 110. எகிப்தில் வெளியிடப்பட்டது, இப்னு மாஜா கிதாபுல் ஃபிதன் பாபு இஃப்திராக்கில் உமம் பக்கம் 287)

1974 -ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் பாராளுமன்றம் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக குஃப்ர் ஃபத்வா (அதாவது அஹ்மதிகள் காஃபிர்களாக ஆகி விட்டனர் என்று மார்க்கத் தீர்ப்பு) கொடுத்தது. இதனை பாகிஸ்தானிலுள்ள பத்திரிகைகள் “அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக 72 பிரிவுகளின் ஒருமித்த கருத்து” என்று தலைப்பில் முக்கியச் செய்தியாக வெளியிட்டது.

அப்போது லாஹூரிலிருந்து வெளிவந்த நவாயே வக்த் என்ற பத்திரிகை இவ்வாறு எழுதியது:

“இஸ்லாமிய வரலாற்றில் இந்த அளவு முழுமையான முறையில் எந்தவொரு விஷயம் தொடர்பாகவும் ஒருபோதும் இந்த உம்மத்தின் இஜ்மா (ஒருமித்த கருத்து) இருந்ததில்லை. இந்த உம்மத்தின் இஜ்மாவில் (ஒருமித்த கருத்தில்) நாட்டிலுள்ள பெரும் பெரும் மார்க்க அறிஞர்கள் மற்றும் மார்க்கக் கட்டளைகளைச் செயல்படுத்துகின்ற ஆலிம்கள் ஆகியோரைத் தவிர எல்லா அரசியல் தலைவர்களும் ஒவ்வொரு பிரிவைச் சார்ந்த அரசியல் தலைவர்களும் கண்ணியத்திற்குரிய சூஃபிமார்களும், இறைஞானிகளும் ஒருமித்த கருத்தை உடையவர்களாக உள்ளனர். அதாவது, காதியானி பிரிவைத் தவிர்த்து முஸ்லிம்களில் உருவாகியுள்ள 72 பிரிவுகள் அனைத்துமே இந்த விஷயத்திற்கான இந்த தீர்வில் ஒருமித்த கருத்தை உடையவர்களாக இருக்கின்றனர். மேலும் இந்தத் தீர்ப்பில் மகிழ்ச்சி அடைகின்றனர்.

இஸ்லாத்தின் ஆலிம்கள் தங்களது ஒருமித்த கருத்துடைய தீர்ப்பிற்கேற்ப தாங்கள் 72 பிரிவுகளில் இருப்பதையும் அஹ்மதிய்யா ஜமாஅத் 73-வது பிரிவாக இருப்பதையும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். மேற்கண்ட நபிமொழியில் குறிப்பிட்டிருப்பது போன்ற 72 பிரிவுகளும் நெருப்பில் இருப்பர். ஒரு பிரிவு இரட்சிப்பிற்குரிய பிரிவாக இருக்கும் என்பது பெருமானார் (ஸல்) அவர்களது தீர்ப்பாகும். ஓர் அறிவிப்பில் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த ஒரு பிரிவு ஜமாஅத்தாக இருக்கும் என்று கூறியுள்ளார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு ஜமாஅத்தாக இருந்து வருகிறது. அந்த ஜமாஅத் ஓர் இமாமிற்குக் கட்டுப்பட்டு நடக்கக் கூடியதாக இருக்கின்றது. முழு இஸ்லாமிய உலகிலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தைத் தவிர கட்டுப்பட்டு நடப்பதற்கு தகுதி படைத்த ஓர் இமாம் வேறு எந்தப் பிரிவிலும் இல்லை.

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

பெற்ற திருக்குர்ஆன் இறங்கியது. இதுவொன்றும் தீயதாகக் கருத வேண்டிய விஷயமல்ல. அல்லாஹ்வே இதைப் பற்றி فَضَّلْنَا بَعْضَهُمْ عَلٰى بَعْضٍ அதாவது சில நபிமார்களுக்கு சிலரின் மீது சிறப்பினை வழங்கியுள்ளோம் என்று கூறியுள்ளான். மேலும், எல்லா கட்டளைகளிலும் நல்லொழுக்கத்திலும் இறைவணக்கங்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று நமக்கு கட்டளையிடப்பட்டிருக்கின்றது. நமது இயல்பினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அனைத்து முழுமைத்தன்மைகளையும் மறைவாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்றால் அந்த கண்ணியமிக்க நபியைப் பின்பற்றுங்கள் என்ற கட்டளை ஒருபோதும் நமக்கு தரப்பட்டிருக்காது. ஏனென்றால், இறைவன் சக்திக்கு அப்பாற்பட்ட எந்த துன்பத்தையும் தருவதில்லை. இதைப் பற்றி அவனே لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا اِلَّا وُسْعَهَا எந்தவோர் ஆன்மாவின் மீதும் அதன் சக்திக்கு அப்பாற்பட்ட சுமையை நாம் சுமத்துவதில்லை என்று கூறுகின்றான். ஏனென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களிடம் உள்ள முழுமையான சிறப்புகளின் தொகுப்பாக இருக்கின்றார்கள் என்பது அவனுக்கு தெரியும். எனவேதான் அவன் நமது ஐவேளை தொழுகைகளிலும் நமக்கு اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ـ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ அதாவது, எங்கள் இறைவா! எங்களுக்கு முன்னர் எத்தனை நபிமார்கள், தூதர்கள், உண்மையாளர்கள், உயிர்த்தியாகிகள் இருந்தனரோ அந்த அனைவரது முழுமையான சிறப்புகளையும் நீ எங்களில் ஒன்று சேர்ப்பாயாக! என்ற இந்த துஆவை செய்யுமாறு நமக்கு அவன் கட்டளையிட்டுள்ளான். இதன் மூலமாக இந்த கண்ணியமிக்க சமுதாயத்தின் உயர்வான இயல்பைக் கணிக்க முடிகின்றது. அதாவது, கடந்த காலத்திலிருந்த பல்வேறு முழுமையான சிறப்புகள் அனைத்தையும் உங்களுக்குள் ஒன்று சேர்த்துக் கொள்ளுங்கள் என்று அந்த சமுதாயத்திற்கு கட்டளையிடப்பட்டிருக்கின்றது. இது பொதுவான கட்டளையாகும். மேலும், சிறப்பைப் பெற்றவர்களின் உயர்வான தகுதிகளை இதன் மூலமாக தெரிந்து கொள்ளலாம். இதன் காரணமாகவே இந்த சமுதாயத்திலுள்ள முழுமை பெற்ற சூஃபிகள் மனித இயல்புகளின் முழுமையின் வட்டத்தை இந்த சமுதாயம்தான் பூர்த்தி செய்துள்ளது என்ற இந்த மறைவான உண்மை வரை சென்று சேர்ந்துள்ளனர். விஷயம் என்னவென்றால், எவ்வாறு ஒரு சிறு விதை பூமியில் விதைக்கப்பட்ட பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அது தனது முழுமையை அடைந்து ஒரு பெரும் மரமாக ஆகி விடுகின்றதோ அவ்வாறே மனிதர்களின் தொடர்ச்சியும் வளர்ச்சியடைந்து கொண்டே இருந்தது. மேலும், மனித ஆற்றல்கள் தமது முழுமையின் பக்கம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. எதுவரையென்றால், நமது நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அது தனது முழுமையின் நிறைவை எட்டி விட்டது.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்தவர்களை உயிர்ப்பித்தார்கள். எவ்வளவு பெரிய அடையாளம் அவருக்கு தரப்பட்டிருக்கின்றது என்று எவராவது கூறினால், அதற்கான பதில் இதுவாகும். அதாவது, உண்மையான முறையில் மரணித்தவர்கள் உயிர் பெறுவது திருக்குர்ஆனின் போதனைகளுக்கு எதிரானதாகும். எனினும், எவர்கள் மரணித்தவர்கள் போன்று நோயாளியாக இருந்தனரோ அவர்களை அவர் உயிர்ப்பித்திருக்கிறார் என்றால் இங்கும் கூட அத்தகைய மரணித்தவர்கள் உயிர் பெற்றுள்ளனர். முன்பிருந்த நபிமார்களும் அவ்வாறு செய்து வந்தனர். உதாரணமாக, இல்யாஸ் நபியும் அவ்வாறு செய்துள்ளார்கள். ஆனால், வேறு பல மகத்தான அடையாளங்கள் உள்ளன. அவற்றை இறைவன் காட்டிக் கொண்டிருக்கின்றான்; இனியும் காட்டுவான்.

(ஹகீகத்துல் வஹி பக்கம் 155-157 தொகுதி 22)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad